**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாள் திங்கட்கிழமை

**E.A. No. 07/2026**

**in**

**E.P. No. 06/2025**

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய PW.1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | விஸ்வநாதன் | கிராமம் | : | குடவாசல் |
| | | | தொழில் | : | வியாபாரம் |
| | | | வயது | : | 40 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் இரண்டாம் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

நான் இதற்கு முன்பு நடந்த R.C.O.P.1/2024 வழக்கில் இரண்டாம் எதிர்மனுதாரர் என்றால் சரிதான். 3ம் மனுதாரர் கல்யாணி எனது தாயார் என்றால் சரிதான். 4 மற்றும் 5 மனுதாரர்கள் எனது சகோதரிகள் என்றால் சரிதான். R.C.O.P.1/2024 வழக்கில் உள்ள 1ம் எதிர் மனுதாரரான காலம் சென்ற விஸ்வநாதன் எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்து விட்ட படியால் அவரது வாரிசுகளாக நானும் 3 முதல் 5 மனுதாரர்களும் R.C.O.P.1/2024 வழக்கில் எதிர் மனுதாரர்களாக சேர்க்கப்பட்டோம் என்றால் சரிதான். நான் மனு சொத்தில் வாடகைக்கு குடியுள்ளேனா என்றால் இல்லை. மனு சொத்தில் எதனடிப்படையில் கடை நடத்தி வருகிறோம் என்றால் பாத்திமா பீவியின் சகோதரரான ஹாஜாநஜிபுதீன் என்பவரிடமிருந்து அவரது மாமனாரின் பொது அதிகார முகவர் என்ற முறையில் எனது தகப்பனார் மனு சொத்தினை கிரயம் பெற்றுள்ளார். மனு சொத்தின் அடிமனை உரிமையாளர் யார் என்றால் அது கோணேஷ்வரசுவாமி கோவிலுக்கு

சொந்தமானது ஆகும். எனது தகப்பனார் தாவா சொத்தினை கோவிலிடமிருந்து அனுமதிபெற்று கிரயம் வாங்கினாரா என்றால் அவ்வாறு யாதுவும் வாங்கவில்லை. நான் மேற்படி நடந்த R.C.O.P.1/2024 வழக்கில் மனு சொத்து கோணேஷ்வரசுவாமி கோவிலுக்கு சொந்தமானது என்றும் ஹாஜாநஜிபுதீன் என்பவரிடமிருந்து அவரது மாமனாரின் பொது அதிகார முகவர் என்ற முறையில் எனது தகப்பனார் கிரயம் பெற்றார் என்றும் எதிர் வழக்குரையிலையோ அல்லது விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அது தற்சமயம் தான் தெரியவந்தது. மேற்படி R.C.O.P.1/2024 வழக்கின் தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி மேல்முறையீடு செய்த நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேல்முறையீட்டு வழக்கில் இந்த நிறைவேற்று மனுவிற்கு இடைக்கால தடை கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். இந்நாள் வரையிலும் இடைக்கால தடை எதுவும் உத்தரவிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. R.C.O.P.1/2024 வழக்கில் எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்ந்தபிறகு எனது தகப்பனார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை ஏற்றுகொண்டேன் என்றால் சரிதான். நான் மேற்படி R.C.O.P.1/2024 வழக்கில் தரப்பினராக சேர்ந்த பிறகு நானும் மூன்று முதல் 5 மனுதாரர்களும் அதன் பின்னிட்டு கூடுதல் எதிர் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி R.C.O.P.1/2024 வழக்கில் இவ்வழக்கின் எதிர்மனுதாரரான பாத்திமாபீவி கட்டடிட உரிமையாளா என்ற எழுவினாவும் நானும் 3 முதல் 5 மனுதாரர்களும் வாடகைதாரர்களா என்ற எழுவினாவும் வனையப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் நிறைவேற்று மனு தாக்கல் செய்து பின்னிட்டு தான் மனு சொத்து கோவிலுக்கு சொந்தமானது என்ற வருவாய் ஆவணங்களை பரிசீலனை செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் R.C.O.P.1/2024 வழக்கை இவ்வழக்கின் எதிர் மனுதாரரான பாத்திமாபீவி உரிமையாளர் என்றும் நான் வாடகைதாரர் என்றும் ஒப்புகொண்டுதான் வழக்கை நடத்தினேன் என்றாலும் அதனடிப்படையில் தான் R.C.O.P.1/2024 வழக்கின் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் R.C.O.P.1/2024 வழக்கில் ஹாஜாநஜிபுதீன் அவரது மாமனாரின் பொது முகவர் என்பதை காட்டும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றாலும் உண்மை தன்மை இல்லாத

ஆவணம் என்றாலும், சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு செல்லதக்கது அல்ல என்றாலும் மேற்படி R.C.O.P.1/2024 வழக்கு தீர்ப்பின் படி மனு சொத்தினை எதிர் மனுதாரர் வசம் கொடுக்கவும் வாடகை பாக்கி கொடுக்கவும் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அடிமனை உரிமையாளர் யாராக இருந்த போதிலும் எனது தகப்பனார் எதிர் மனுதாரருடன் வாய்மொழியாக வாடகை ஒப்பந்தம் செய்துகொண்டதால் மேற்படி எதிர் மனுதாரர் தான் கட்டிட உரிமையாளர் என்றும் அதனடிப்படையில் நான் வாடகை பாக்கி கொடுக்கவும் சொத்தின் வசத்தினை கொடுக்கவும் கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் நீதிமன்றத்தில் இம்மனுவினை நிறைவேற்றவிடாமல் காலம் கடத்தவேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனது தகப்பனார் மனு சொத்து தொடர்பாக எதிர் மனுதாரருடன் வாய்மொழி வாடகை ஒப்பந்தம் செய்துகொண்டதால் அவரது வாரிசு என்ற முறையில் என்னையும் 3 முதல் 5 மனுதாரர்களும் கட்டுப்பட்டுள்ளோம் என்றாலும் நான் மனுவில் சொல்லியுள்ள நிலைநிறுத்ததக்கதல்ல என்றாலும் இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.27 17:08:38 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.